அ. சரியாக வரிசைப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |

ஆர்வலர் | அன்பிற்கும் | தரும் | புன்கண்நீர்

பூசல் | உண்டோ | அடைக்குந்தாழ்

ஆ. 'அன்பிற்கும் உண்டோ' என்ற திருக்குறளின் பொருளில் விடுப்பட்ட செற்றொடர்களைச் சரியான இடத்தில் பொருத்துக.

அன்புக்கும் ________________________________ உண்டோ?

____________________________________ உள்ளே இருக்கும் அன்பைப் பலரும் ____________________________________.

அறிய வெளிப்படுத்திவிடும்

அடைத்துவைக்கும் தாழ்

அன்புடையவரின் சிறு கண்ணீரே

LIVEWORKSHEETS

இ. திருக்குறளின் சொற்களுக்குப் பொருத்தமான பொருளை இணைக்கவும்

| | |
|---|---|
| அன்பிற்கும் | |
| உண்டோ | |
| அடைக்குந்தாழ் | |
| ஆர்வலர் | |
| புன்கணீர் | |
| பூசல் | |
| தரும் | |

அன்புடையவன்

பலரும் அறிய வெளிப்படுத்துதல்

ஒருவர் மீது கொண்ட அன்பிற்கு

கொடுக்கும் (சொல்லிவிடும்)

இருக்கிறதோ

வெளிக்காட்டாமல் அதனை அடைக்கும் தாழ்ப்பால்

கண்ணீர்த் துளிகள்

பாடி மகிழ்க.

அன்பு என்பதே தெய்வமானது
அன்பு என்பதே இன்பமானது)

அள்ளி அள்ளி கொடுத்த போதும் குறைவில்லாதது ......
கள்ளருக்கும் காவலர்க்கும் இனிமையானது ......
உள்ளம் என்பதுள்ளவர்க்கு உண்மையானது .....
உலகம் என்பதுள்ளவரை உறுதியானது ..

மதத்தின் மீது வைத்த அன்பு பக்தி ஆனது
மனிதன் மீது வைத்த அன்பு பாசமானது
இதயம் மீது வைத்த அன்பு உண்மையானது
ஏழை மீது வைத்த அன்பு கருணையானது

அறிவில்லாத மனிதர் உள்ளம் அருளில்லாதது
அருளில்லாத மனிதர் உள்ளம் பணிவில்லாதது
பணிவில்லாத மனிதர் உள்ளம் பண்பில்லாதது
பண்பில்லாத மனிதர் உள்ளம் அன்பில்லாதது

பொன் படைத்த மனிதர் கோடி நகைகள் வாங்கலாம்
பூமி வீடு காடு மேடு கரைகள் வாங்கலாம்
அன்பு என்னும் பொருளை எந்த உலகில் வாங்கலாம் ?நல்ல
அன்னை தந்தை பிள்ளை வாழும் மனையில் வாங்கலாம்

அன்பு என்பதே தெய்வமானது
அன்பு என்பதே இன்பமானது

LIVEWORKSHEETS